பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

எட்டாம் திருமொழி - மாதவத்தோன்
திருவரங்கம் பெரிய கோயிலின் பெருமை 1

** மாதவத்தோன் புத்திரன் போய் * மறிகடல் வாய் மாண்டானை *
ஓதுவித்த தக்கணையா * உருவுருவே கொடுத்தான் ஊர் **
தோத வத்தித் தூய்மறையோர் * துறை படியத் துளும்பி எங்கும் *
போதில் வைத்த தேன் சொரியும் * புனல் அரங்கம் என்பதுவே 1

பிறப்பகத்தே மாண்டொழிந்த * பிள்ளைகளை நால்வரையும் *
இறைப் பொழுதில் கொணர்ந்து கொடுத்து * ஒருப்படுத்த உறைப்பன் ஊர் *
மறைப் பெரும் தீ வளர்த்திருப்பார் * வருவிருந்தை அளித்திருப்பார் *
சிறப்புடைய மறையவர் வாழ் * திருவரங்கம் என்பதுவே 2

மருமகன் தன் சந்ததியை * உயிர் மீட்டு மைத்துனன்மார் *
உரு மகத்தே வீழாமே * குருமுகமாய்க் காத்தான் ஊர் **
திருமுகமாய்ச் செங்கமலம் * திருநிறமாய்க் கருங்குவளை *
பொருமுகமாய் நின்றலரும் * புனல் அரங்கம் என்பதுவே 3

கூன் தொழுத்தை சிதகுரைப்பக் * கொடியவள் வாய்க் கடிய சொல் கேட்டு *
ஈன்றெடுத்த தாயரையும் * இராச்சியமும் ஆங்கொழிய **
கான் தொடுத்த நெறி போகிக் * கண்டகரைக் களைந்தான் ஊர் *
தேன் தொடுத்த மலர்ச் சோலைத் * திருவரங்கம் என்பதுவே 4

பெரு வரங்கள் அவை பற்றிப் * பிழக்குடைய இராவணனை *
உருவரங்கப் பொருதழித்து * இவ்வுலகினைக் கண் பெறுத்தான் ஊர் **
குரவரும்பக் கோங்கலரக் * குயில் கூவும் குளிர் பொழில் சூழ் *
திருவரங்கம் என்பதுவே * என் திருமால் சேர்விடமே 5

கீழ் உலகில் அசுரர்களைக் * கிழங்கிருந்து கிளராமே *
ஆழி விடுத்து அவருடைய * கருவழித்த அழிப்பன் ஊர் *
தாழை மடலூடு உரிஞ்சித் * தவள வண்ணப் பொடி அணிந்து *
யாழின் இசை வண்டினங்கள் * ஆளம் வைக்கும் அரங்கமே 6

கொழுப்புடைய செழுங்குருதி * கொழித்திழிந்து குமிழ்த்தெறிய *
பிழக்குடைய அசுரர்களைப் * பிணம் படுத்த பெருமான் ஊர் *
தழுப்பரிய சந்தனங்கள் * தடவரை வாய் ஈர்த்துக் கொண்டு *
தெழிப்புடைய காவிரி வந்து * அடி தொழும் சீர் அரங்கமே 7

வல் எயிற்றுக் கேழலுமாய் * வாள் எயிற்றுச் சீயமுமாய் *
எல்லை இல்லாத் தரணியையும் * அவுணனையும் இடந்தான் ஊர் **
எல்லியம் போது இருஞ்சிறை வண்டு * எம்பெருமான் குணம் பாடி *
மல்லிகை வெண்சங்கூதும் * மதிள் அரங்கம் என்பதுவே 8

குன்றாடு கொழுமுகில் போல் * குவளைகள் போல் குரைகடல் போல் *
நின்றாடு கணமயில் போல் * நிறமுடைய நெடுமால் ஊர் **
குன்றூடு பொழில் நுழைந்து * கொடி இடையார் முலை அணவி *
மன்றூடு தென்றல் உலாம் * மதிள் அரங்கம் என்பதுவே 9

** பரு வரங்கள் அவை பற்றிப் * படை ஆலித்து எழுந்தானை *
செருவரங்கப் பொருதழித்த * திருவாளன் திருப்பதி மேல் **
திருவரங்கத் தமிழ் மாலை * விட்டுசித்தன் விரித்தன கொண்டு *
இருவர் அங்கம் எரித்தானை * ஏத்த வல்லார் அடியோமே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்